கிறோம். வியாபாரம் செய்ய வேண்டும் என்று சிலர் பதிவு செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வியாபாரம் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறோம். விவசாயம் செய்ய வேண்டும் என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே எல்லோருக்குமே வியாபாரம் செய்யக் கடன் உதவி கொடுக்கப் படுவதில்லை.

**திரு. எஸ். முருகையன்** : பர்மாவிலிருந்து வந்த அகதிகள் மொத்தம் எத்தனை பேர் ? அவர்களுக்குத் தொழில் செய்வதற்கு எத்தனை பேருக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது ? விவசாயம் செய்வதற்கு எத்தனை பேருக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அதெல்லாமல் சுற்றிக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா** : இது ஒரு பெரிய அடிப்படைக் கேள்வி. இராமநாதபுரம் ஜில்லாவில் நிலம் கொடுப்பது சம்பந்தப் பட்டது. முழு விவரம் என்றால் கொடுக்க முடியும். ஆனால், இப் பொழுது திட்டவட்டமாக எவ்வளவு என்று சொல்வதற்கில்லை. காரணம், சமீபத்தில் இரண்டொரு மாதங்களாக இன்னும் வந்து கொண்டே இருக்கிறார்கள். சென்ற வருஷம் முடியும் சமயத்தில் ஏறத்தாழ 31,000 பேர்கள் வந்ததாக எனக்கு ஞாபகம். ஞாபகத் திலிருந்துதான் இப்பொழுது சொல்கிறேன். சுற்றத்தார் இல் லாமல் வந்தவர்களுக்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்து கொடுத் திருக்கிறார்கள். மற்றவர்கள், சுற்றத்தார், உறவினர், இன்னும் ஏதோ தொடர்பு இருப்பதைப் போல் சொல்லிக் கொண்டு பர்மா விலிருந்து பதிவு செய்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கே வந்தவுடனே இராமநாதபுரம் ஜில்லாவிலோ மற்ற இடங் களிலோ பார்க்கும்போது அவர்களுக்கு எந்தவிதமான தொடர் பும் இல்லை. அவர்கள் திரும்பி வந்து, "இந்த ஊரில் தொடர்பு இல்லாதவர்களுக்கு அரசாங்கம் செய்யக்கூடிய உதவியைப்போல் எங்களுக்கும் செய்ய வேண்டும்" என்று சொல்கிறார்கள். அவர் களுடைய கஷ்டம் தான் கஷ்டமாக இருக்கிறது அதற்கும் அரசாங்கம் பார்த்துப் பரிசீலனை செய்யவேண்டும் என்பது என் னுடைய விருப்பம்.

**திரு. கரு. சீமைச்சாமி** : பர்மாவிலிருந்து அகதிகள் இன்னும் எத்தனை பேர் வர இருக்கிறார்கள் ?

**கனம் திரு. வெ. ராமையா** : தனிக் கேள்வி வேண்டும்.

**மின்சாரப் பொறியியல் கிளையில் எழுத்துப் பிரிவுப் பணியாளர்களை நிரந்தரமாக்குதல்.**

*427 கேள்வி.—**திரு. கே. ஏ. மதியழகன்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பொதுப் பணித் துறையைச் சார்ந்த மின்சாரப் பொறி யியல் அலுவலக எழுத்தவர்கள் எவ்வளவு பேர் நிரந்தரமாக்கப் படாமல் இருக்கின்றனர் ?

[3rd April 1965

*(இ) அவர்கள் நிரந்தரமாக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன ?*

THE HON. SRI V. RAMAIAH : *(a) & (b)* : There are 13 permanent and 19 temporary posts of Clerks and Typists in the Electrical Engineer Division, Madras and 18 temporary posts in the Electrical Engineer Division, Tiruchirappalli.

In the Electrical Engineer Division, Madras, three of the persons working in the permanent posts are permanent. As the permanent incumbents of the remaining 10 permanent post, are on other duty with the Madras State Electricity Board and their lien in the Electrical Engineer Division has not yet been either cancelled or suspended, the 10 persons acting in these posts, have not been confirmed. The question of cancelling or suspending the lien of the personnel, who are on other duty, is under correspondence between the Electrical Engineer and the Chief Engineer for Electricity. The question of permanent retention of the temporarary posts in the Electrical Engineer Division, Madras, is under consideration.

The Electrical Engineer Division, Tiruchirappalli, is temporary, having been formed only in May 1962 and it is being continued year after year. The question of making permanent the posts therein will arise only after the continous existence of the posts for at least three years, and this has been taken up now with the Chief Engineer (General).

**திரு. கே. எ. மதியழகன்** : *தமிழிலும் பதில் சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.*

**கனம் திரு. வெ. ராமைய்யா** : *(அ) & (இ) சென்னை மின்சாரப் பொறியாளர் பிரிவில் எழுத்தர் (க்ளார்க்ஸ்), தட்டெழுத்தர் (டைபிஸ்ட்ஸ்) பதவிகளில் காயமான 13 பதவிகளும். . . (சிரிப்பு) . . . . "காயமான" என்றால் "பர்மனென்ட் ஆன" என்று அர்த்தம் . . . 19 தற்காலிகப் பதவிகளும் உள்ளன. திருச்சிராப்பள்ளி மின்சாரப் பொறியாளர் பிரிவில் 18 தற்காலிகப் பதவிகள் உள்ளன.*

*சென்னை மின்சாரப் பொறியாளர் பிரிவில் உள்ள காயமான . .. (சிரிப்பு)—"காயமான" என்றால், "பர்மனென்ட் ஆன" என்றுதான் அர்த்தம்.*

*. . . மூன்று பதவிகளில் பணியாற்றி வருகிற மூன்று பேர் வேலையில் காயமாக்கப்பட்டவர்கள். . . (சிரிப்பு).*

**கனம் சபாநாயகர்** : *"காயமாக்கப்பட்டவர்கள்" என்றால் "நிரந்தரமாக்கப்பட்டவர்கள்" என்று தான் அர்த்தம்.*

**கனம் திரு. வெ. ராமைய்யா** : *. . . எஞ்சியுள்ள பத்துப் பேர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் (மெட்ராஸ் ஸ்டேட் எலெக்ட்ரிசிடி போர்டு) பணியாற்றி வருகின்றனர். மின்சாரப் பொறியாளர் பிரிவில் அவர்களுடைய பதவியுரிமை (லீன்) இன்னும் ரத்து*

செய்யப்படவோ நிறுத்தி வைக்கப்படவோ இல்லை. எனவே, அவர்களுடைய பதவிகளில் தற்காலிகமாய் வேலை பார்த்து வரும் பத்துப் பேர்களும் இன்னும் காயமாக்கப்படவில்லை (சிரிப்பு). அதாவது “இன்னும் பர்மனென்ட் செய்யப்படவில்லை”.

**கனம் சபாநாயகர்:** ‘காயமாக்குவது’ என்றால் permanent என்பதுதான் பொருள். It is a word known to all people.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But it is colloquial.

**கனம் திரு. வெ. ராமையா:** இவர்களின் பதவியுரிமையை ரத்து செய்வது அல்லது நிறுத்தி வைப்பது குறித்து மின்சாரப் பொறியாளருக்கும் மின்சாரத் தலைமைப் பொறியாளருக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. சென்னை மின்சாரப் பொறியாளர் பிரிவில் மேற்படி தற்காலிகப் பதவிகளைப் ‘பர்மெனென்ட்’ ஆக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மின்சாரப் பொறியாளர் பிரிவு தற்காலிகமானதுதான். அது 1962-ம் ஆண்டு மே மாதத்தில்தான் துவக்கப்பட்டது. அது தொடர்ந்து பணியாற்றி வருவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அந்தப் பிரிவில் உள்ள பதவிகள் குறைந்த அளவு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீடித்தால் மட்டுமே, அப் பதவிகளை நிரந்தரமாக்குவது குறித்த பிரச்சினை எழும். இது குறித்து இப்போது பொறி இயல் பணித் துறை தலைமைப் பொறியாளரைக் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இனிமேலாவது அமைச்சர் அவர்கள் “ஆட்கள் காயமாக்கப்பட்டார்கள்” என்பதற்குப் பதிலாக “ஆட்கள் நிரந்தரமாக்கப்பட்டார்கள்” என்ற வாசகத்தை வைத்துத் திருத்திக்கொள்ளலாம் அல்லவா?

(பதில் இல்லை)

**திரு. கோ. சி. மணி:** மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவர்களை நிரந்தரமாக்குகிறார்கள். மூன்று வருஷம் வரையில் அவர்கள் தொடர்ந்து பணி புரிந்தால் நிரந்தரமாக்கலாம் என்ற விதி இருக்கும் காரணத்தால், மூன்று வருஷம் வரையில் வேலை பார்க்க விடாமல், அதற்குள்ளேயே நீக்குவதும் மாற்றுவதுமாக இருக்கிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** எனக்கு இருக்கக்கூடிய விவரம் அது போன்று இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** மின்சாரக் குழுவில் பணி புரியச் சென்றவர்களுடைய ‘லீன்’ஐ இன்னும் அந்தந்த இலாகாவில் காலவரையறை இன்றி வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

[3rd April 1965

இரண்டும் அநேகமாக சர்க்கார் பொறுப்பில் உள்ளவைதான். அப்படியிருக்க, மின்சாரக் குழுவிலேயே அவர்களை நிரந்தரமாக மாற்றிவிடக் கூடாதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தப் பதிலை நான் பார்த்த தற்குப் பிறகு, என்னுடைய மனதிலும் அது போன்ற எண்ணம் தான் தோன்றி, "மின்சாரக் குழுவிலேயே அவர்களுடைய சர்விசை ஏன் நிரந்தரமாக்கக் கூடாது?" என்று எழுதிக் கேட்டி ருக்கிறேன். இது விஷயமாக மின்சார போர்டோடு கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. 'லீன்' ஐ நீடிக்காமல் இருக்க என்ன செய்வது என்பது பற்றியும் யோசிக்கலாம்.

திரு. வை. சங்கரன் : எவ்வளவு காலத்திற்குள் பாக்கி உள்ள வர்கள் காயப்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எலெக்ட்ரிகல் என்ஜினியர் டிவிஷனுக்கும் எலெக்ட்ரிசிடி போர்டுக்கும் இருக்கும் கரெஸ்பான் டென்ஸ் விரைவில் முடியும் என்று எதிர்பார்க்கிறேன். கரெஸ் பாண்டென்ஸ் முடிவடைந்தவுடனே நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய முடிவுகள் விரைவில் ஏற்படும்.

திரு. எஸ். ஜெ. ராமசாமி : தலைவர் அவர்களே, 'காயம்', 'காயம்' என்று அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று முறை குறிப்பிட்டார்கள். இந்தி வந்தால் தமிழ் கெடும் என்று சொல் கிறார்கள். 'காயம்' என்ற வார்த்தை எப்படி வந்ததோ, அதுபோல் இதுவும் சிதறப் போகிறது என்று இதிலிருந்து அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்வாரா ?

(பதில் இல்லை)

திரு. மீ. கலியாணசுந்தரம் : பத்து தற்காலிகக் குமாஸ்தாக்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்களைக் காயம் செய்கிற சமயத்தில், அவர்கள் எந்தத் தேதியில் இந்தப் பதவிக்கு வந்தார்களோ அந்தத் தேதியிலிருந்து காயம் செய்து, அனுகூலங்கள் கிடைக்க உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இவர்களைப் 'பர்மனென்ட்' ஆக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை இது.

*Rice sales by private shops under the family card system*

*428 Q.—SRI RAMA ARANGANNAL : Will the Hon the Minister for Food be pleased to state—

(a) the number of private shops permitted to sell rice under the family card system in Madras City; and

(b) the basis on which these shops have been authorised to sell rice?